Under Section 13(2) of the Securitisation and Reconstruction of Financial Assets And Enforcement Of Security Interest Act, 2002 read with Rule 3 (1) of the Security Interest (Enforcement) Rules, 2002. The undersigned is the Authorised Officer of Aadhar Housing Finance Ltd.(AHFL) under Securitisation And Reconstruction Of Financial Assets And Enforcement of Security Interest Act, 2002 (the said Act). In exercise of powers conferred under Section 13(12) of the said Act read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002, the Authorised Officer has issued Demand Notices under section 13(2) of the said Act, calling upon the following Borrower(s) (the "said Borrower(s)"), to repay the amounts mentioned in the respective Demand Notice(s) issued to them that are also given below. In connection with above, Notice is hereby given, once again, to the said Borrower(s)to pay to AHFL, within 60 days from the publication of this Notice, the amounts indicated herein below, together with further interest as detailed in the said Demand Notice(s), from the date(s) mentioned below till the date of payment and/or realization, payable under the loan agreement read with other documents/writings, if any, executed by the said Borrower(s). As security for due repayment of the loan, the following assets have been mortgaged to AHFL by the said Borrower(s) respectively.

| Sl No. | Name of the Borrower(s) / Co-Borrower / Guarantor (s) | Demand Notice Date and Amount | Description of the Immovable property |
|---|---|---|---|
| 1. | (Loan Code : 22000001017 Chidambaram Branch) Ayyappan Murugaiyan (Borrower) Vijayalakshmi (Co-Borrower) Muvedhan R (Guarantor) | 15-05-2023 ₹ 18,52,699.00 | Rs No 352 6A Na Rs No 352 6A Selliyamman Koil Street Ulu Thukuppai Mayiladuthurai Taluk Solasakk Aranallur, Thanjavur - 609118, Tamil Nadu. |
| 2. | (Loan Code : 21000000208 Trichy Branch) Kanniyammal P (Borrower) Loganathan P (1st Co-Borrower) Mallika L (2nd Co Borrower) | 15-05-2023 ₹ 4,28,238.00 | S F No 285 4 Arangoor Village Thottiam Taluk , Tiruchchirappalli - 621215, Tamil Nadu. |
| 3. | (Loan Code : 21000001832 Trichy Branch) Sivakumar M (Borrower) Nagalakshmi S (Co-Borrower) Pushpalatha L (Guarantor) | 15-05-2023 ₹ 4,19,114.00 | 5 2C1 5 4A Door No 122 B East Street Allur Villa Ge Srirangam Taluk, Tiruchchirappalli - 620101, Tamil Nadu. |
| 4. | (Loan Code : 21010000033 Trichy Branch) Sasikala Gunasekaran (Borrower) Gunasekaran C (Co-Borrower) | 15-05-2023 ₹ 4,23,343.00 | 189/A Kudiyana Street Na Tennanbadi Pudukkottai - 621316,Tamil Nadu. |
| 5. | (Loan Code : 20300000270 Kumbakonam Branch) Veeraiyan V (Borrower) Panchavarnam V (Co-Borrower) | 17-05-2023 ₹ 3,21,881.00 | West Street Ovarur Village Thiruthuraipo Ondi Taluk , Thanjavur - 614711, Tamil Nadu. |

If the said Borrowers shall fail to make payment to AHFL as aforesaid, AHFL shall proceed against the above secured assets under Section 13(4) of the Act and the applicable Rules, entirely at the risks of the said Borrowers as to the costs and consequences. The said Borrowers are prohibited under the Act from transferring the aforesaid assets, whether by way of sale, lease or otherwise without the prior written consent of AHFL. Any person who contravenes or abets contravention of the provisions of the said Act or Rules made there under, shall be liable for imprisonment and/or penalty as provided under the Act.

**Place : Chidambaram, Trichy and Kumbakonam** **Authorised Officer**
**Date : 22.05.2023** **Aadhar Housing Finance Limited**



**SALE NOTICE**

**OFFICE OF THE LIQUIDATOR, M/s. VEESONS ENERGY SYSTEMS PRIVATE LIMITED (Under Liquidation)**
**Reg.Off.C 14/2 INDUSTRIAL ESTATE, THUVAKUDI, THIRUCHIRAPALLI, TAMIL NADU- 620 015.**
**Phone : 0422 - 2492454, Email: ragavcarp@gmail.com**

**E Auction - SALE OF PROPERTIES UNDER IBC 2016**
**Date and Time of E Auction on Wednesday 21st June, 2023 between 10.30 a.m. and 11.30 a.m.**

Sale of Properties, owned by M/s.Veesons Energy Systems Private limited (under Liquidation) forming part of the Liquidation Estate, by the Liquidator, approved by the Hon'ble NCLT, Chennai. The sale will be done by the undersigned through e-auction platform at the web portal of **https://nbid.nesl.co.in/app/login.** on **21st June 2023**, Wednesday as described below:

**General Terms and Conditions applicable to all the auctions:**

1. The e Auction will be conducted on **"AS IS WHERE IS and WHATEVER THERE IS BASIS"** through e-Auction service provider M/s. National E Governance Service Ltd.
2. Details of assets (land & building) can be obtained from the tender document or contacting Liquidator office by Email.
3. The EMD shall be payable through NEFT/RTGS to the account of **M/s. Veesons Energy Systems Pvt Ltd (Under Liquidation)** with **SBI, SME Branch, Thuvakudi, Thiruchirappalli, Account Number: 30253951396, IFSC: SBIN0003081.**
4. Bids shall be submitted through online mode, only, in the format prescribed.
5. The bid form, along with the terms and conditions of the e-Auction procedure in full, can be downloaded from the website **https://nesl.co.in/auction-notices-under-ibc/** two days after publication of this ADVT.
6. **Last Date & Time for submission of Bid Documents is 5 PM on Monday , 5th June 2023.**
7. **Date of Declaration of Qualified Bidders is 08.06.2023.**
8. Date & Time for Inspection by Qualified Bidders from 08.06.2023 to 14.06.2023 by 5 PM or with prior appointment with the liquidator by writing to him, 48 hours before intended visit on his **email : ragavcarp@gmail.com.**
9. **Last date for payment of Earnest Money Deposit is 17.06.2023 by 5.00 PM.**
10. Date and time of e-Auction: **The E Auction shall be held on Wednesday 21st June 2023 for assets as described below, at specific time consisting of specific properties.**
11. The Name of the Eligible Bidders will be identified by the Liquidator to participate in e-auction on the portal **https://nbid.nesl.co.in/app/login.** The e-auction provider (NeSL) will provide User id and password by email to eligible bidders.
12. The bidder, who submits the highest offer on closure of online auction, shall be declared successful subject to approval by the Liquidator.
13. The Liquidator reserves his right to reject any or all of the bids received, without assigning any reasons whatsoever.
14. **Upon confirmation of sale, the purchaser shall deposit 25% of the sale price with applicable GST (including the EMD amount) immediately within 24 hours from bid being declared successful and the balance sale consideration of 75% along with applicable GST to be paid within 90 days from the date of sale. Provided that payments made after 30 days shall attract interest at the rate of 12%. If the purchaser fails to pay amounts in time, the amounts deposited till then, shall stand forfeited and the assets re-auctioned.**
15. The above ADVT will be valid for 60 days from the date of this ADVT.
16. The purchaser has to bear all cost of dismantling, transportation and other expenses, GST, Registration charges, Stamp Duty and other taxes, duties in respect of purchase of the property.
17. All Correspondence shall be had ONLY through email at given email address: **ragavcarp@gmail.com** and not otherwise.

**1. Land & Building as detailed below :**

| Sr. No | LOT NO. | Brief Description of Land and Building | Reserve Price | EMD 10% | Bid Increase | Bid Timing |
|---|---|---|---|---|---|---|
| 1 | S No. 1 | Factory Land measuring 13.64 acres in Unit 4 - Plot - R1 in Thuvakudi Industrial Estate, Thuvakudi, Tiruchirappalli in S.F. 412 (Part), 413 (Part), 414 (Part) 421 (Part) to 425 (Part), 430 (Part) & 431 (Part) & with building & shed thereon. | 10,00,00,000 | 1,00,00,000 | 5,00,000 | 10:30 AM to 11:30 AM |

**R. Raghavendran, B.Com., FCA, CISA**
**IBBI/IPA001/IPB00211/201718/10411**
**Dated: 22.05.2023** **Liquidator Veesons Energy Systems P Limited**
**Place : Coimbatore** **AFA Valid till 17.11.2023**



**PUBLIC NOTICE**

I, P. Vijayabaskar, S/o. Palanisami,2/186A, Karuppusamy Koil Street, Veeramangudi, Papanasam Taluk, Thanjavur District -613 204 inform to the Public that I Lost the original document Registered with Thiruvaiyaru Sub Registrar Office, bearing Document No.1586/2011, at Ganapathi Agraharam, on 09.10.2022 at 5.00 PM. Finders may contact me at the above address or at my Mob No.98942 97058.

**- P.Vijayabaskar**



**CHANGE OF NAME**

My son, T. Sivagnanam, born on 30th June 1999 (native district: Thanjavur), residing at No.33-B, Arulananda Nagar 4th Street, Thanjavur-613 007, shall henceforth be known as **T SIVA**.

P.THIRUGNANAM.
(Father)
Thanjavur, 3rd August 2015.



**CHANGE OF NAME**

My son, Veeravihaash, born on 21st December 2014 (District of Birth: Pudukkottai), residing at No. 1/119, Paingalukkadai, Paingal Post, Peravurani Taluk, Thanjavur-614 623, shall henceforth be known as **K. VIKRAMADITHYA**

V. KARTHIKEYAN
(Father)
Thanjavur, 20th February 2023.



**GOVERNMENT OF INDIA**
**DEPARTMENT OF SPACE**
**CMG, SDSC - SHAR SRIHARIKOTA - 524124**

**Brief E-TENDER NOTICE / CORRIGENDUM-A**

No:SHAR:CMG:CIVIL:MAINT:E-PT-02(A)/23-24 Dt:19.05.2023

**"Providing RCC Substructure & steel column works @ Admin bldg, Keepakam"** (T/C-23-005, Est. cost ₹ 12.91 Lakhs); **"Renovation works in Annexure Bldg @ SP2B & fencing works @ P3 Radar"** (T/C-23-006, Est. cost ₹ 8.85 Lakhs); **"Construction of security cabin, Misc works @ SMPC unit-1"** (T/C-23-007, Est. cost ₹ 10.74 Lakhs); **"False ceiling works @ New LCC & flooring works @ MON3 Bldg"** (T/C-23-008, Est. cost ₹ 16.24 Lakhs) **"Misc civil works @ SMPC Unit-I"** (T/C-23-009, Est. cost ₹ 10.43 Lakhs). **Sale period extended up to 31.05.2023.** Interested tenderers may visit www.isro.gov.in or www.tenderwizard.com/ISRO for details.

**Sd/- GROUP HEAD, CMG/SDSC SHAR**



**FEDBANK FINANCIAL SERVICES LTD – AUCTION NOTICE**

This is to inform the public at large, that FEDBANK FINANCIAL SERVICES LTD., has decided to conduct Auction of Gold ornaments belonging to accounts (mentioned below) which have become overdue or which have defaults or margin breach customers. The Auction would be held at respective Branches specified below on **Thursday, 01-06-2023** between 10.00 a.m. to 12.00 p.m. This would continue till the auction process is over.

**TRICHY CHATRAM,** 0431-4023004, **FEDGL01750007033, 0007479,**

Change in Venue or Date, if any will be displayed on our Website **www.fedfina.com.** All bidders participating will be intimated subsequently with respect to acceptance or rejection of bids submitted by them. Customer who want to release their ornaments shall visit at the base branch wherein the ornaments were pledged by the customer or contact at the number mentioned above on/or before **31.05.2023** subject to the terms and condition applicable.

Auction will be conducted at respective branches, in case the auction does not get completed on the given date due to any reasons, the auction in respect thereto shall be conducted on subsequent working days **at district level branch** after displaying the details on our Website. No further communication shall be issued in this regard.

Trichy,
22.05.2023

For Fedbank Financial Services Ltd.,
Sd/- Authorised Signatory

# மீண்டும் ஆயிரம் ரூபாய் நோட்டை வெளியிட்டாலும் வியப்படைய மாட்டேன்



**காரைக்குடி, மே 21:** மீண்டும் புதிதாக ஆயிரம் ரூபாய் நோட்டை வெளியிட்டாலும் வியப்படையமாட்டேன் என முன்னாள் மத்திய நிதியமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ப. சிதம்பரம் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தையொட்டி, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி கல்லூரிச் சாலையில் உள்ள அவரது சிலைக்கு ஞாயிற்றுக்கிழமை ப. சிதம்பரம் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர், சிலை வளாகத்தில் கட்சிக் கொடியை சிதம்பரம் ஏற்றிவைத்தார். இதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

இரண்டாயிரம் ரூபாய் நோட் டை அறிமுகப்படுத்தியதே மாபெரும் பிழை. அந்தப் பிழையை 7 ஆண்டுகள் கழித்தாவது திருத்திக் கொண்டார்களே அதுவரை மகிழ்ச்சி. கொடுக்கல், வாங்கல் போன்றவற்றுக்கு ரூ. 2 ஆயிரம் நோட்டை பெரும்பாலும் யாரும் பயன்படுத்தவில்லை. பெரிய தொழில் புரிபவர்கள், கட்டுமானத் தொழில் நிறுவனங்களிடம் தான் ரூ. 2 ஆயிரம் நோட்டுகள் உள்ளன. புதிதாக ரூ. 500 நோட்டு வெளியிட்டதைப் போல, மீண்டும் ரூ. 1000 புதிய நோட்டை வெளியிடலாம். அப்படி வெளியிட்டால் நான் வியப்படையமாட்டேன் என்றார்.

# ரூ.2,000 வாபஸால் பொதுமக்களுக்கு பிரச்னை இல்லை: கே. அண்ணாமலை

**கோவை, மே 21:** இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதால் பொதுமக்களுக்கு பிரச்னை இல்லை, கொள்ளையடித்தவர்களுக்குத்தான் பிரச்னை என்று பாஜக மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை தெரிவித்தார்.

இது குறித்து கோவை விமான நிலையத்தில் பாஜக மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:

2021 – 2022 மற்றும் 2022 – 2023ஆம் ஆண்டுகளை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் 22 சதவீதம் மது விற்பனை அதிகரித்துள்ளது. 75 சதவீத டாஸ்மாக் மதுக்கடைகளை மூட வேண்டும். 25 சதவீத டாஸ்மாக் கடைகளை மட்டுமே திறக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் கள் விற்பனை செய்யலாம்.

தற்போது 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இல்லை. 2 ஆயிரம் நோட்டுகள் வைத்துள்ளவர்கள் பதுக்கிவைத்துள்ளனர். 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதால், கொள்ளையடித்தவர்களுக்குத்தான் பிரச்னை. 2024 மக்களவைத் தேர்தலில் போட்டியிட எனக்கு விருப்பமில்லை. ஒரு தொண்டனாகப் பணியாற்றுவேன்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் நான் பாஜகவுக்கு வந்தேன். தமிழ்நாட்டை விட்டு வெளியே செல்ல விருப்பமில்லை. இந்த மண்ணில் எனது அரசியல் இருக்க வேண்டும் என விரும்புகிறேன். கிரேட் 2 பதவியில் இருக்கும் காவல் துறை நண்பர்களுக்கு பதவி உயர்வு வழங்காதது கண்டிக்கத்தக்கது. இதுகுறித்து, முதல்வரிடம் காவல் துறைத் தலைவர் பேச வேண்டும் என்றார்.

# திமுகவிலிருந்து மிசா பாண்டியன் இடைநீக்கம்

**சென்னை, மே 21:** திமுகவிலிருந்து முன்னாள் துணை மேயரான மிசா பாண்டியனை இடைநீக்கம் செய்து, அக் கட்சியின் பொதுச் செயலர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: மதுரை மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மிசா பாண்டியன் திமுகவின் கட்டுப்பாட்டை மீறியும், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்துப் பதவிகளில் இருந்தும் இடைநீக்கம் செய்யப்படுகிறார் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

மதுரை மாநகராட்சி மத்திய மண்டலக் குழுக் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் நூர்ஜஹானை மிரட்டியது தொடர்பான புகாரில் கட்சியிலிருந்து மிசா பாண்டியன் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்க வேண்டும்

**சென்னை, மே 21:** சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி, மின்சாரம் மற்றும் ஆயத் தீர்வை அமைச்சர் வி.செந்தில் பாலாஜியை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று ஆளுநர் ஆர்.என்.ரவியிடம், தமிழக பாஜக சார்பில் மனு அளிக்கப்பட்டது.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை தலைமையிலான மகளிர் அணி நிர்வாகிகள் இந்த மனுவை ஞாயிற்றுக்கிழமை அளித்தனர்.

பின்னர் கே.அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் நிகழ்ந்த கள்ளச்சாராய மரணங்கள் குறித்து விசாரணை நடத்த ஆளுநரிடம் வலியுறுத்தப்பட்டது. டாஸ்மாக்கில் தொடரும் ஊழல் மற்றும் கட்சியினரின் ஆதிக்கம் குறித்தும் விவரமாக கூறினோம்.

அதேநேரம், ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக, டாஸ்மாக் மதுக் கடைகளின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்து, அந்த வருமானத்தை வேறு வழியில் ஈட்டுவது குறித்த வெள்ளை அறிக்கை இன்னும் 15 நாள்களில் முதல்வரிடம் வழங்கவுள்ளதாகவும் ஆளுநரிடம் தெரிவித்தோம். அரசியலமைப்புச் சட்டம், பதவிப்பிரமாணத்துக்கு எதிராக எந்த ஒரு அமைச்சரின் நடவடிக்கை இருந்தால், தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி சம்பந்தப்பட்ட அமைச்சரை நீக்கம் செய்ய முதல்வருக்கு ஆளுநர் அறிவுறுத்தலாம்.

அந்த அடிப்படையில், அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவியில் இருந்து உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஆளுநரிடம் வலியுறுத்தப்பட்டது.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி அவர் மீதான வழக்கில் விசாரணையில் காவல் துறைக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினோம். காவல்துறை முதல்வர் வசம் உள்ள துறையின் கீழ் வருகிறது. அதே முதல்வர் தலைமையிலான அமைச்சரவையில் செந்தில்பாலாஜி இருக்கிறார். அவ்வாறு இருக்கும்போது எப்படி நேர்மையான விசாரணை நடக்கும்?

அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஆளுநருக்கு இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, இந்த விவகாரத்தில், முதல்வருக்கு அறிவுறுத்தல், விசாரணை முடியும்வரை அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜியை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ நீக்குமாறு கூறலாம் என்றார் அவர்.

**ஆளுநரிடம் பாஜக மனு**



கள்ளச்சாராய மரணங்கள் விவகாரம், அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்வது ஆகியவை தொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் ஞாயிற்றுக்கிழமை மனு அளித்த தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை, சட்டப்பேரவை பாஜக குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன். உடன் பாஜக மகளிரணி நிர்வாகிகள்.

# முதல் சுதந்திரப் போராட்டம் தொடங்கியது தமிழகத்தில்தான்

## ஆளுநர் ஆர்.என்.ரவி பெருமிதம்

**சென்னை, மே 21:** நாட்டில் முதல் சுதந்திர போராட்டம் தொடங்கியது தமிழகத்தில் தான் என்று ஆளுநர் ஆர். என். ரவி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'எண்ணித்துணிக' நிகழ்ச்சியில் 5-ஆவது பகுதியில் முன்னாள் படை வீரர்கள் மற்றும் வீரதீர செயலுக்கான பதக்கம் பெற்றவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என். ரவி பேசியது:

நாட்டில் ராணுவ வீரர்களுக்கு கிடைக்க வேண்டிய பாராட்டுகள் முழுமையாக கிடைப்பதில்லை. தமிழ்நாடு ஆன்மிகத்தின் தலைநகரம் மட்டுமல்லாது, நாட்டில் சுதந்திர போராட்டத்தை முதலில் தொடங்கிய மாநிலமாகவும் உள்ளது.

வலிமையான நாடு என்றால் வலிமையான ராணுவம் இருக்க வேண்டும். அது தான் நாட்டுக்குப் பெருமை. ராணுவப் பணி என்பது ஒரு வேலை இல்லை, நாட்டுக்காக அர்ப்பணிக்கும் செயல் ஆகும்.

போர்க் காலங்களில் ஒட்டுமொத்த நாடும் ராணுவத்தின் பின் நிற்கிறது. ஆனால், அமைதி காலங்களில் ராணுவத்தை யாரும் பாராட்டுவதில்லை. ஓய்வுக்குப் பின்னாலும் நாட்டின் அளவிட முடியாத சொத்தாக ராணுவ வீரர்கள் உள்ளனர்.

தமிழகத்தில் எந்த மாவட்டத்துக்கு நான் சென்றாலும் முன்னாள் ராணுவ வீரர்களை சந்தித்து வருகிறேன்.

நீண்ட நாளாக எனக்கு ஒரு யோசனை உள்ளது. தமிழகத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் எந்தப் பகுதியைச் சார்ந்து உள்ளாரோ அந்தப் பகுதியில் உள்ள பள்ளியில் அவரது புகைப்படத்தை வைத்து எந்த போரில் அவர் உயிர் இழந்தார், அவரது வரலாறு உள்ளிட்ட விவரங்களை எழுதி வைக்க வேண்டும்.

அந்த ராணுவ வீரர் உயிர் தியாகம் செய்த நாளில் அந்தப் பகுதி மக்களை அழைத்து புகழ் வணக்க நிகழ்ச்சி நடத்த வேண்டும்.

ஓய்வு பெற்ற ராணுவ வீரர்களை கௌரவமாக நடத்த வேண்டும். முன்னாள் ராணுவ வீரர்களுக்கான குறைகள், பிரச்னைகள் ஆகியவை தொடர்பாக மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவேன் என்றார் அவர்.

முன்னதாக முன்னாள் படை வீரர்களான சாமிநாதன், கணேசன், நடராஜன், பாலதண்டாயுதன், மறைந்த ராணுவ வீரர்களின் மனைவிகள் ஷோபா சுதாகர், வேதவல்லி விநாயக், குமாரி, வானதிதேவி உள்ளிட்டோருக்கு பொன்னாடை அணிவித்து சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் லெப்டினல் கர்னல் என். டி ராஜன், ஆளுநர் மாளிகை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஊராட்சி செயலர்களின் கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும்



**சென்னை, மே 21:** போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஊராட்சி செயலர்களின் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

ஊராட்சி செயலர்களை ஊராட்சி மன்றம் மூலம் நியமனம் செய்யக்கூடாது, ஊராட்சி அமைப்புகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை பனகல் மாளிகை முன்பாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் கோரிக்கை நியாயமானதாகும். எனவே, ஊராட்சி செயலர்களின் பணி விதிகள் தொடர்பான அரசாணையை வெளியிடவும், டிஎன்பிஎஸ்சி மூலம் காலி பணியிடங்களை நிரப்பவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

# ஆளுநரிடம் இன்று அதிமுக புகார் மனு

**சென்னை, மே 21:** தமிழக சட்டம்-ஒழுங்கு, கள்ளச்சாராய மரணங்கள் விவகாரம் தொடர்பாக, அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி திங்கள்கிழமை (மே 22), கட்சியினருடன் பேரணியாகச் சென்று, ஆளுநரிடம் புகார் மனு அளிக்கவுள்ளார்.

கிண்டியில் வேளச்சேரி சாலை சென்னை மாநகர போக்குவரத்துக் கழக பணிமனை பின்பகுதியில் காலை 10.25 மணிக்கு அதிமுகவினர் திரண்டு, அங்கிருந்து பேரணியாக ஆளுநர் மாளிகைக்குச் செல்லவுள்ளனர்.

அங்கு எடப்பாடி பழனிசாமி தலைமையில் முக்கிய நிர்வாகிகள் ஆளுநர் ஆர்.என்.ரவியைச் சந்தித்து, தமிழக சட்டம்-ஒழுங்கு விவகாரம், கள்ளச்சாராய மரணங்கள் மற்றும் திமுக அமைச்சர்களின் முறைகேடுகள் தொடர்பாக புகார் மனு அளிக்கவுள்ளனர்.

# மின்னல் பாய்ந்ததில் 2 இளைஞர்கள் பலி

**விருதுநகர், மே 21:** அருப்புக்கோட்டை வட்டம், பரளச்சி அருகே மின்னல் பாய்ந்ததில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

விருதுநகர் மாவட்டம், பரளச்சி அருகேயுள்ள புல்லாநாயக்கன்பட்டியைச் சேர்ந்த பெரிய கிருஷ்ணசாமி மகன் பெருமாள் (28). இவரது உறவினர் சின்ன கிருஷ்ணசாமி மகன் விஜய் (27). இவர்கள் இருவரும் சனிக்கிழமை தங்களுக்குச் சொந்தமான ஆடுகளை மேய்க்கச் சென்றனர். அப்போது, பரளச்சி பகுதியில் இடி, மின்னலுடன் மழை பெய்தது.

இந்த நிலையில், மேய்ச்சலுக்குச் சென்ற ஆடுகள் மட்டும் மாலையில் வீட்டுக்குத் திரும்பின. ஆனால், பெருமாள், விஜய் இருவரும் வீடு திரும்பாததால், அவர்களை உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடிவந்தனர்.

இந்த நிலையில், ராணி சேதுபுரம் பகுதியில் இருவரும் மின்னல் பாய்ந்து உயிரிழந்தது ஞாயிற்றுக்கிழமை தெரியவந்தது. இதையடுத்து, அவர்களது உடல்கள் கூறாய்வுக்காக அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன. இதுகுறித்து பரளச்சி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# காலமானார்

## இ.லட்சுமணன் (83)



**சென்னை, மே 21:** எழுத்தாளர் இ.லட்சுமணன் (83) உடல் நலக்குறைவால் சனிக்கிழமை காலமானார்.

சென்னை பெசன்ட் நகரில் வசித்து வந்த இவர், கனரா வங்கியில் முதுநிலை மேலாளராகப் பணியாற்றியவர். தினமணி ஆசிரியர் உரை பக்கத்தில் பல ஆண்டுகளாக வாதூலன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதிவந்தார்.

அவருக்கு மனைவி லலிதா, மகள் மீனாட்சி, மகன் ஈஸ்வர் உள்ளனர்.

அவரது இறுதிச் சடங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தொடர்புக்கு 97909 04627.

# ஓலைச்சுவடிகளைப் பதிப்பிக்கத் தனி அமைப்பு தேவை



**சென்னை, மே 21:** தமிழகத்தில் அழியும் நிலையில் உள்ள 10 லட்சம் ஓலைச்சுவடிகளைப் பதிப்பிக்க தனி அமைப்பை அரசு ஏற்படுத்த வேண்டும் என்று பாமக நிறுவனர் ச.ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பழந்தமிழர்களின் கணிதவியல், வானியல், சித்த மருத்துவவியல், தமிழ் இலக்கியங்கள் தொடர்பான 10 லட்சம் ஓலைச்சுவடிகள் கேட்பாரின்றி கிடக்கின்றன. சுவடி நூலகங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பண்ணையார்களின் இல்லங்கள் போன்றவற்றில் கிடக்கும் இவற்றை உடனடியாக மீட்டெடுத்து பதிப்பிக்கப்படவில்லை என்றால் அடுத்த சில ஆண்டுகளில் அழிந்துவிடக்கூடும் என்று சுவடியியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

அவர்களின் எச்சரிக்கைக்கு தமிழக அரசு செவிமடுக்க வேண்டும். தமிழ்த் தாத்தா உ.வே.சா-வை தமிழ் இலக்கிய உலகம் கொண்டாடுவதற்கான காரணம் தமிழகத்திலும், அண்டை மாநிலங்களிலும் சிதறிக்கிடந்த தமிழ் இலக்கியங்களின் ஓலைச்சுவடிகளை தேடித் தேடி சேர்த்து பதிப்பித்து இலக்கிய நூல்களாக வெளியிட்டதுதான்.

அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அதனிடம் உள்ள சுவடிகளை மட்டும் தான் பதிப்பித்து வருகிறது. அந்தப் பணியை தமிழாராய்ச்சி நிறுவனம் முடிப்பதற்கு இன்னும் வெகு காலம் ஆகலாம். அதனால், தமிழகம் முழுவதும் சிதறிக் கிடக்கும் ஓலைச்சுவடிகளைத் தேடிப்பிடித்து பதிப்பிக்க தனி அமைப்பை தமிழக அரசு உருவாக்க வேண்டும்.

மிகவும் தேவையான, அரிய பணியை செய்வதற்காக அந்த அமைப்புக்கு போதிய கட்டமைப்பு வசதிகளுடன், நிதியும் ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

# திருநெல்வேலி மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளர் மைதீன்கான்

## துரைமுருகன் அறிவிப்பு

**சென்னை, மே 21:** திருநெல்வேலி மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளராக டி.பி.எம்.மைதீன்கானை நியமித்து அக் கட்சியின் பொதுச்செயலர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

திருநெல்வேலி மத்திய மாவட்ட திமுக செயலராகப் பணியாற்றி வரும் அப்துல் வகாபை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக டி.பி.எம்.மைதீன்கான், மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட, மாநகர நிர்வாகிகள் அவருடன் இணைந்து பணியாற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

# மதிமுக பொதுச் செயலர் பதவிக்கு ஜூன் 14-இல் தேர்தல்



**சென்னை, மே 21:** மதிமுக பொதுச் செயலர், அவைத் தலைவர் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகப் பதவிகளுக்கான தேர்தல், வரும் ஜூன் 14-இல் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலர் வைகோ அறிவித்துள்ளார்.

அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: மதிமுக தலைமைக் கழக நிர்வாகிகளான பொதுச் செயலர், அவைத் தலைவர், பொருளாளர், முதன்மைச் செயலர், துணை பொதுச்செயலர்-5 பேர் உள்ளிட்ட பதவிகளுக்கான தேர்தல் பொதுக் குழுவில் ஜூன் 14-இல் நடைபெறும்.

இந்த பொதுக்குழுக் கூட்டம், நியூ ஆவடி சாலையில் உள்ள விஜய்ஸ்ரீ மகாலில் நடைபெறும். தலைமைக் கழக நிர்வாகிகள் பொறுப்புக்குப் போட்டியிடுவோரை பொதுக்குழு உறுப்பினர்களாக தகுதி பெற்ற தலா 25 பேர் முன்மொழியவும், வழிமொழியவும் வேண்டும்.

ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்களாக 7 பேர், தணிக்கைக்குழு உறுப்பினர்களாக 6 பேர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். அந்தப் பொறுப்புகளுக்கு போட்டியிடுவோரை பொதுக்குழு உறுப்பினர்களாக தகுதி பெற்ற தலா 10 பேர் முன்மொழியவும், வழிமொழியவும் வேண்டும். தேர்தலில் போட்டியிடுவோர் மே 27 முதல் விண்ணப்பங்களைப் பெற்று, ஜூன் 1-ஆம் தேதிக்குள் மதிமுக தலைமை அலுவலகமான தாயகத்தில் அளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

# உயிருடன் இருக்கும்போதே இறந்ததாக கூறி பத்திரப் பதிவு: சகோதரர் மீது புகார்

**பல்லடம், மே 21:** திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே உயிரோடு இருப்பவர் இறந்ததாகக் கூறி பத்திரப் பதிவு செய்த சகோதரர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பல்லடம் அருகேயுள்ள செம்மிபாளையம் ஊராட்சி குப்புசாமிநாயுடுபுரத்தைச் சேர்ந்த தங்கமணி (52) கூறியதாவது: நானும் எனது சகோதரர் சாமிநாதனும் சேர்ந்து 71 சென்ட் சொத்துகளை விற்பதற்காக கோவையைச் சேர்ந்த ஜோசப் என்பவருக்கு பவர் எழுதிக் கொடுத்தோம்.

இந்நிலையில், சாமிநாதன் மற்றும் குடும்பத்தினர் முறைகேடாக ஆவணங்கள் தயார் செய்து பல்லடம் பத்திரப் பதிவு அலுவலகத்தில் பவர் ஆவணத்தை ரத்து செய்தனர். தொடர்ந்து, உயிரோடு இருக்கும் என்னை இறந்து விட்டதாக போலி ஆவணங்கள் தயாரித்து இணைத்துள்ளனர்.

இதற்கு வழக்குரைஞர் ராஜேஷ் என்பவர் உறுதுணையாக இருந்துள்ளார். மேலும், பல்லடம் பத்திரப் பதிவாளராக கடந்த 2021 ஆம் ஆண்டு பணியாற்றிய பாலமுருக பிரபாகர் போலி ஆவணங்கள் குறித்து விசாரிக்காமல் ஆவணத்தைப் பதிவு செய்துள்ளார்.

எனவே, எனது சகோதரர் சாமிநாதன், வழக்குரைஞர் ராஜேஷ், பத்திரப் பதிவாளர் பாலமுருக பிரபாகர் ஆகியோர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து பதிவுத் துறை ஐ.ஜி., மாவட்டப் பதிவாளர், எஸ்.பி. ஆகியோருக்கு புகார் மனு அனுப்பியுள்ளேன் என்றார்.


## விற்பனை அறிவிப்பு

கலைப்பு அதிகாரி அலுவலகம். M/s. வீசன்ஸ் எனர்ஜி சிஸ்டம்ஸ் (பி) லிட் (கலைப்பில் உள்ளது)
பதிவு அலுவலகம்: C 14/2 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு - 620 015
போன் : **0422 - 2492454, Email: ragavcarp@gmail.com**

IBC 2016-ன் கீழ் சொத்துக்கள் மின் ஏல விற்பனை

**மின் ஏல தேதி மற்றும் நேரம்**

**ஜுன் 21, 2023 புதன்கிழமை காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை**

மாண்பமை. NCLT சென்னை அவர்களின் அனுமதி பெற்று கலைப்பில் உள்ள M/s. வீசன்ஸ் எனர்ஜி சிஸ்டம் (பி) லிட்-க்கு பாத்தியப்பட்ட கீழ்கண்டுள்ள சொத்துக்கள் **ஜுன் 21, 2023** அன்று மின் ஏலம் மூலம் விற்பனை நடைபெற உள்ளது. இந்த மின் ஏலம் கீழே கையொப்பமிட்ட கலைப்பு அதிகாரி அவர்களால் **https://nbid.nesl.co.in/app/login.** இணைய தளம் மூலம் விற்பனை நடைபெறும்.

**இதர நிபந்தனைகள்**

1. இந்த மின் ஏல விற்பனை "எவ்வாறு உள்ளதோ அவ்வாறே" "உள்ளது உள்ளபடி" என்ற நிபந்தனையின்படி இ-ஏல சேவை அளிப்போரான M/s. நேஷனல் இ-கவர்னஸ் சர்வீசஸ் லிட். அவர்களின் மூலம் நடைபெறும்.
2. சொத்துக்கள் (நிலம் மற்றும் கட்டிடம்) பற்றிய விவரங்களை ஏல படிவம் மூலமாகவோ அல்லது கலைப்பு அதிகாரியின் மின் அஞ்சல் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.
3. முன் பண வைப்புத் தொகையை NEFT/RTGS மூலம் M/s. **வீசன்ஸ் எனர்ஜி சிஸ்டம்ஸ் (பி) லிட், SBI,** SME கிளை, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி, என்ற பெயரில் **IFSC: SBIN0003081, Account Number: 30253951396** என்ற வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
4. ஏலம் அதற்கென்றே உள்ள படிவங்கள் மூலம் இணையதளத்தில் மட்டுமே கோரப்பட வேண்டும்.
5. இப்படிவத்தினை மின் ஏல முறைக்குரிய நிபந்தனைகளுடன் இந்த விளம்பரம் வந்த இரண்டு நாட்களுக்கு பிறகு https://nesl.co.in/auction-notices-under-ibc/ என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
6. **ஏல ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் ஜுன் 05, 2023 திங்கட்கிழமை மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.**
7. ஏலத்தில் பங்குபெற தகுதியான (Eligible bidder list) ஏலதாரர்கள் பற்றிய அறிவிப்பு நாள் 08.06.2023.
8. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை தகுதியான ஏலதாரர்கள் 08.06.2023 முதல் 14.06.2023 வரை பார்வையிடலாம் அல்லது பார்வையிடும் தேதியை 48 மணி நேரம் முன்பாக ragavcarp@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு தெரியப்படுத்தி அனுமதி பெற்றுக் கொண்டு பார்வையிடலாம்.
9. ஏல முன்வைப்புத் தொகையை 17.06.2023 மாலை 5 மணிக்குள் செலுத்த வேண்டும்.
10. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மின் ஏல விற்பனை ஜுன் 21, 2023 புதன்கிழமை குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்டபடி நடைபெறும்.
11. தகுதியான ஏலதாரர்கள் கலைப்பு அதிகாரியின் மூலம் தேர்வுசெய்யப்பட்டு அவர்களின் விபரங்கள் https://nbid.nesl.co.in/app/login. என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். இ-ஏல சேவை அளிப்போர் மூலம் தகுதியான ஏலதாரர்களுக்கு ID மற்றும் கடவுச்சொல் மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.
12. அதிக விலைப்புள்ளி (நிர்ணயித்த விலைக்கு மேல் அதிகமாக) சமர்ப்பித்த நபர், ஆன்லைன் ஏல முடிவில் கலைப்பு அதிகாரியின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு, வெற்றிபெற்ற ஏலதாரராக அறிவிக்கப்படுவார்.
13. கலைப்பு அதிகாரி எந்த ஒரு ஏல குறிப்பையும் எந்த ஒரு காரணமும் காட்டாது ஏற்கவோ அன்றி மறுக்கவோ உரிமை உடையவர் ஆவார்.
14. விற்பனை உறுதி செய்யப்பட்டவுடன், வெற்றிபெற்ற ஏலதாரர் விற்பனை விலையில் 25% தொகையை உரிய ஜி எஸ் டி யுடன் (குறைந்த பட்ச முன்வைப்புத் தொகையுடன் சேர்த்து) கலைப்பு அதிகாரியால் ஏலத்தில் வென்றதாக அறிவிப்பு வெளியிடப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளும், மீதமுள்ள 75% தொகையை உரிய ஜி எஸ் டி யுடன் விற்பனை உறுதி செய்த நாளிலிருந்து 90 நாட்களுக்குள்ளும் செலுத்திவிட வேண்டும். 30 நாட்களுக்குப்பிறகு செலுத்தப்படும் தொகைக்கு 12% வட்டி வசூலிக்கப்படும். வாங்கியவர் அவ்வாறு குறிப்பிட்ட கால அளவில் தொகை முழுவதும் செலுத்த தவறுவாராயின், அவர் அதுவரை செலுத்தியுள்ள தொகை முழுவதும் இழக்க நேரிடுவதுடன், சொத்துக்களும் மறு ஏலத்திற்கு உட்படுத்தப்படும்.
15. மேற்குறிப்பிட்டுள்ள விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்கள் வரை செல்லுபடியாகும்.
16. வாங்கிய சொத்துக்களை பிரித்தெடுத்தல் வாகன செலவு, இதர செலவுகள், ஜி.எஸ்.டி. ரெஜிஸ்ட்ரேசன் செலவுகள், ஸ்டாம்ப் டியூட்டி மற்றும் இதர வரிகள் அனைத்தும் சொத்துக்களை வாங்கியவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.
17. அனைத்து தேவைகளுக்கும் மற்றும் தகவல்களுக்கும் ragavcarp@gmail.com என்ற மின்அஞ்சல் முகவரி மூலம் மட்டுமே தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. வேறு வகையான தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**ஏல விற்பனைக்கு உட்படுத்தப்படும் நிலம் மற்றும் கட்டிடம் விபரம்**

M/s. வீசன்ஸ் எனர்ஜி சிஸ்டம்ஸ் (பி) லிட், துவாக்குடி

| வ. எண் | கூறு எண் | நிலம் மற்றும் கட்டிடம் பற்றிய விபரம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை Rs | முன் வைப்புத் தொகை 10% | ஏல அதிகரிப்பு தொகை Rs | ஏலம் கோரும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வகை 1 | திருச்சி மாவட்டம் துவாக்குடி கிராமம் துவாக்குடி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் SF No: 412(பகுதி), 413(பகுதி), 414(பகுதி), 421(பகுதி) to 425(பகுதி), 430(பகுதி), 431(பகுதி)-ல் **13.64 ஏக்கர்** இடத்தில் பிளாட் எண் R-1 தொழிற்சாலை நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம் | 10,00,00,000 | 1,00,00,000 | 5,00,000 | 10:30 AM to 11:30 AM |

**R. ராகவேந்திரன், B.Com FCA,CISA**
**IBBI/IPA-001/IP-P00211/2017-18/10411**
கலைப்பு அதிகாரி, வீசன்ஸ் எனர்ஜி சிஸ்டம்ஸ் (பி) லிட்
**AFA Valid till 17.11.2023**

தேதி : 22.05.2023
இடம் : கோயமுத்தூர்